(முற்பகல் 9-50)

(ஆ) பேராவூரணித் தொகுதியிலுள்ள நவகொல்லைக் காடு கிராமத்தை சேர்ந்த சிலர் கர்நாடக மாநிலத்தில் கொத்தடிமைகளாக இருப்பது குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேராவூரணித் தொகுதி ஒட்டங்காடு ஊராட்சி நவகொல்லைக்காடு கிராமத்தைச் சேர்ந்த சிலரை கர்நாடக மாநிலத்தில் கொத்தடிமைகளாக வைத்திருப்பது குறித்து'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழ்நாடு காவல் துறை குற்றவியல் பிரிவினைச் சேர்ந்த அலுவலர்கள் கர்நாடக மாநிலம், சிக்மகளூர் மாவட்டம் பிடுவல்லி எஸ்டேட்டிற்கு 7—4—1989 அன்று சென்று, இதுகுறித்து விசாரணைகள் நடத்தினர்.

(2) திரு. ஏ. திருப்பதி. திருமதி பி. தமிழரசி, செல்வி. சின்னப்பொண்ணு மற்றும் திரு, ஏ. நாகூரான் ஆகிய நால்வரும் சிக்மகளூர் மாவட்டம், மூடுகரை வட்டத்தில் பிடுவல்லி எஸ்டேட்டில் காப்பித் தோட்டத்தில் வேலை செய்து வந்ததாகவும் இவர்கள் தங்களது சொந்த ஊருக்கு 1989 மார்ச்சு மாதம் திரும்பி சென்று விட்டதாகவும் விசாரணையில் தெரியவருகிறது. இவர்கள் தஞ்சாவூரில் தங்களது சொந்த ஊரில் தற்பொழுது இருக்கிறார்கள்.

(3) சிக்மகளூரில் நடத்தப்பட்ட விசாரணையின்படி, கீழ்க்காணும் ஆறு (6) நபர்கள், சிக்மகளூர் வட்டம், மசகாளி என்னும் இடத்தில், கீழக்கரையைச் சேர்ந்த திரு. எஸ். எம். கபீர் என்பவருக்குச் சொந்தமான முபாரக் காப்பித் தோட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக தினக்கூலிக்கு வேலை செய்து வருகிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது :

(1) வி. நாகூரான், த/பெ. வீரப்பன் அம்பலம்.

(2) கே. லக்ஷ்மணன், த./பெ. குழந்தைசாமி.

(3) பி. ஜோதிமணி, த/பெ. பாலுசாமி.

1989 மே 3] [டாக்டர் எ. இராமகிருஷ்ணன்]

(4) என். சித்ரா, த/பெ. நாகூரான் அம்பலம்.

(5) நாகஜோதி, த/பெ. நடேசன் அம்பலம்.

(6) மல்லிகா, க/பெ. சந்திரசேகரன்.

மேற்படி ஆறு (6) பேரும் தாங்கள் கொத்தடிமைகளாக நடத்தப் படவில்லையெனவும், தாங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் இரண்டு வாரங்களில் காப்பிக்கொட்டை பொறுக்கும் வேலை முடிவுற்றதும் ஊர் திரும்பவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். திரு. சின்னையன் அம்பலம் அவர்களின் மகன் வடிவேலு என்பவர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அப்துல் ஜப்பார் அவர்களுக்குச் சொந்தமான சிக்மகளூர் வட்டத்தில் உள்ள நரிகுடி என்னு மிடத்தில் நடத்தப்பட்டு வரும் தேனீர் விடுதியில் வேலை செய்து வருகிறார்.

(4) தமிழ்நாடு காவல்துறையினர் நடத்திய விசாரணையி லிருந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள எவரும் கொத்தடிமைகளாக இருந்ததாகத் தெரியவில்லை.

*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவை முன் வைக்கப்பட்டுள்ள குறிப்பைப் பார்த்தேன். படித்தேன். அதே நேரத்தில் தமிழகப் போலீசார் கர்நாடக மாநிலத்திற்குச் சென்று அங்கே தெளிவாக விசாரணை செய்து, மிக நல்ல நடவடிக்கை எடுத்து அந்த மக்களையெல்லாம் இங்கே கொண்டு வந்து—எங்கள் ஊருக்குக் கொண்டு வந்து விட்டதற்கு முதலில் தமிழகப் போலீசாருக்கும், தமிழக அரசுக்கும் எனது மனப்பூர்வமான—இதயப் பூர்வமான—உளப்பூர்வமான— நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நான் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே வருவதற்கு $1\frac{1}{2}$ மாத காலமாகிவிட்டது. நம்முடைய தமிழக போலீசார் கர்நாடக மாநிலத்திற்குச் சென்றது 7-4-1989ல். போலீசார் அங்கே சென்ற தேதியிலிருந்து இன்றுவரை சுமார் ஒரு மாத காலமாகிறது. அதற்கு ஒரு 10 நாளைக்கு முன்பு நான் இந்தத் தீர்மானத்திற்கான அறிவிப்பைக் கொடுத்தேன். எனவே, இதுபோன்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்த வரையில் எங்களுக்கு சற்று விரைந்து பதில் அளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொத்தடிமைகளாக அங்கே அவர்கள் இருந்து ஒரு நாளைக்கு 10 ரூபாய்தான் ஊதியமாகப் பெற்றிருக்கிறார்கள். கொத்தடி மைகளாகத்தான் இருந்தார்கள். ஆனால், அறிக்கையில் கொத்

தடயங்களாக இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இதுபோன்ற நடவடிக்கைகள் இனி நிகழாமல் தமிழக அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போலீசாரும், தமிழக அரசும் சுறுசுறுப்புடன் செயல்பட்டிருக்கிறார்கள் என்றாலும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரை அவற்றை விரைவுபடுத்த வேண்டும் என்று மட்டும் கேட்டு அமைகிறேன்.

3. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1989-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவைப், பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.